IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# ஐங்குறு நூறு, கலித்தொகையில் வாழும் மகளிரின் மாண்புகள் ஓர் ஒப்பீடு

திருமதி. ஞா. கார்த்திகா,
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்),
தமிழ்த்துறை,
மா.இரா.அரசு கலைக்கல்லூரி,
பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவுப் பெற்றது,
மன்னார்குடி 614001

**முன்னுரை:**

உலகமொழிகள் அனைத்துக்கும் முதன்மை மொழியான தமிழ் மொழியில் தொல்காப்பியம், திருக்குறள், எட்டுத்தொகை , பத்துப்பாட்டு, தகடூர் யாத்திரை, சிலம்பு, மணிமேகலை ஆகிய நூல்கள் சங்க காலத்தில் தோன்றியவை எனக் கருதப்பட்டாலும் எட்டுத்தொகையும், பத்துபாட்டுமாகிய தொகுப்பு நூல்களையே சங்க இலக்கியங்கள் என்று கூறுவர் இதனை பாட்டும், தொகையும் என்று கூறுவர். எட்டுத்தொகை நூல்கள் அகம் சார்ந்த நூல்கள், புறம் சார்ந்த நூல்கள் என பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் அகம் சார்ந்த நூல்களுல் ஐங்குறுநூற்றையும், கலித்தொகையும் ஒப்பிடும் நோக்கினை இவ் ஆய்வுக் கட்டுரையில் காணலாம்.

**ஆய்வுச் சுருக்கம்:**

எட்டுத்தொகை நூல்களான நற்றினை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுபத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, இவற்றுள் தலைவன், தலைவியின், காதல் வாழ்கை திருமணநிலை, இல்லற மேண்மையினை விளக்கும் வகையில் ஐங்குறு நூற்றையும், கலித்தொகையும் ஒப்பீடு செய்து பார்கும்போது மகளிரின் சிறப்பு, கற்புநெறி, திருமணநிலை, சமுதாய முன்னேற்றம் ஆகியவை இரு நூல்களிலிருந்தும் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு அக வாழ்கையின் சிறப்பினையும், பெருமையையும் விளக்கும் விதமாக இக் கட்டுரை அமைந்துள்ளது.

**ஐங்குறுநூற்றின் சிறப்பு:**

எட்டுத்தொகையில் ஒன்றான ஐங்குறுநூற்றில் அடி அளவாய் குறுமையேனும், விரிக்கும் பொருள் நயத்தாலும், விளக்கும் உணர்வுக்களங்களாலும் மிக உயர்ந்து நிற்பது இத்தொகை நூல் ஆகும். ஒத்த அன்பினால் ஆன தலைவனும் தலைவியும் தாமே தம்முட் கண்டு காதலித்துக் களவுறவிலேயும் ஒன்று கலந்து விடுகின்ற கலப்பிலே, அவர்பால் எழுகின்ற எண்ணற்ற நினைவுகளையும், அவற்றின் நடுவாக நின்றியக்கும் பண்பாட்டு மரபினையும், இச்செய்யுட்களிலே நாம் காணலாம்.

உறவுகளில் பல இடையூறுகள் ஏற்பட்டு அவர் தம் நினைவுகள், உணர்வுகள், கனவுகள் ஆகியவை சுதந்திரமாக பரவி விரிதலையும் காதலர்களின் இன்ப, துன்பங்களையும், இந்நூலிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

**கலிந்தொகையின் சிறப்பு:**

கலித்தொகை, பண்டைக்காலத்தே இசையோடு பாடும் இசைப்பாட்டாகவே விளங்கியது. கற்றறிந்தார் ஏத்தும் கலி என்ற பழங்காலச் சான்றோரின் மதிப்பீடு மிக மிக பொருந்துவதே என்பதனைச், சொல்லுக்குசொல், கருத்துக்குக் கருத்துச் சுவைகனியும் வகையில் இந்நூலின் செய்யுல்கள் அனைத்தும் காட்டுகின்றன. இது கலி எனவும் கலிப்பா எனவும் கலிப்பாட்டு எனவும் நூற்றைம்பது கலி எனவும் பண்டை உரையாசிரியர்களால் குறிக்கப்படும். மக்களின் இயல்பான வாழ்வியலை இலங்கச் செய்வனவே இக்கலியிலுள்ள செய்யுள்கள். அக்காலத்தில் வாழ்ந்த ஐந்து நிலத்தில் வாழ்ந்த பல்வேறு வாழ்கை நிலைமைகளையும் சுவை குன்றாமல் அழகோடும் நயமாகவும் விளக்கும் வண்ணம் இந்நூல் அமைந்துள்ளது.

**மகளிரின் நிலை:**

**"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் -புவி**
**பேணி வளர்த்திடும் ஈசன்**
**மண்ணுக்குள்ளே சில முடர்- நல்ல**
**மாதர் அறிவைக் கெடுத்திட்டார்**

என பாரதிதாசன், பெண்கள் கல்வியில் முன்னேற்றம் அடைந்தால் தான் எல்லாத் தளைகளையும் அறுத்து எறிய முடியும் என்கிறார்.

**“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்**

என்ற பாரதியின் கனவு இன்று உலகில் எல்லா நாடுகளிலும், நனவாகிக் கொண்டிருக்கிறது. இவ்வகையான விழிப்புணர்வுக்கு இலக்கியங்களே முக்கிய கருவாக இருக்கின்றன. இவ் ஆய்வு கட்டுரையில் இடம் பெறக்கூடிய கலித்தொகை, ஐங்குறுநூறு இரண்டு நூல்களிலும், பெண் என்பவள் வணங்குதலுக்கும் போற்றுதலுக்கும் உரியவளாக கருதப்படுகிறாள் என்பதே உண்மையாகும்.

தலைவன் வினையின் பொருட்டு பிரிந்து செல்லும் வேலையிலும், தன்னை விடுத்து பிற மகளிரை நாடி கூடும் பொழுது, ஏற்படும் பிரிவு துயரை எண்ணி மனந்தளராமல், தன் குடும்ப நலம் கருதிப்பொருத்து தன் கணவனையே ஏற்று வாழ்கின்ற மகளிரின் மேன்மையை இக்கட்டுரையில் காணலாம்.

**உயர்நெறியை உடையவள் பெண்:**

சங்க இலக்கியங்களுல் பாவகையால் பெயர் பெற்றவை இரண்டு, ஒன்று கலித்தொகை மற்றொன்று பரிபாடல், கலித்தொகை கடவுள் வாழ்த்துடன் 150 கலிப்பாக்களைக் கொண்டது. இப்பாடல்கள் காதலரின் இன்ப, துன்ப உணர்ச்சிகளை இயற்கைச் சூழலை, மனித மாண்புகளை கட்டிக்காட்டும் வண்ணம் அமைந்துள்ளது. கலித்தொகையில் தன்னை விரும்பிய தலைவனோடு தலைவி உடன் போய்விட்டாள். அப்போது தலைவியைத் தேடிச் சென்ற செவிலித்தாய் எதிரில் வரும் அந்தணரைக் கண்டு விரைவுகிறாள். செவிலித் தாய்க்கு அந்தணர் கூறும் மறுமொழி தமிழரின் அகவாழ்வை அப்படியே கண்முன் நிறுத்துகிறது. அத்தோடு பெண்ணின் தனிப்பட்ட குடும்ப வாழ்கையிலும் அவள் ஆணுக்கு சமமானவள் எனும் உயர் நெறியை நிலைநாட்டும் நோக்கத்தைக் கருவாகக்கொண்டு இயங்குகிறது.

'வேந்தன் மேய தீம்புனல் உலகம்' எனும் மருதம் பல்பொருள் வளமையால் பெருக்க முற்றிருந்தது போன்றே மக்களின் வாழ்வியல் வகையாலும், பிறநிலத்து மாந்தரினும் தனித்தன்மை பெற்றிருந்தது. ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் சார்ந்தே, ஒருவரையொருவர் போற்றியோ ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருக்கும் ஒழுக்கநிலை மரபுகளும் ஐங்குறுநூற்றின் வழி அறிய முடிகிறது. தலைவன் தலைவனிடையே பிரிவு காலத்தே எழும் மனவுணர்வுகளின் நுட்பமான தன்மைகளையும், தலைவியரின் மனச்செழுமையையும் விளக்கும் வகையில் இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

**மருதக்கலி மகளிரின் மேண்மை :**

**தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்றே**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்** (கு.56)

எனும் வள்ளுவரின் குறளுக்கு இலக்கணமாக விளங்கக் கூடியவள் பெண். கற்புநெறியில் வழுவாமல் தன்னைக்காத்துக்கொண்டு தன் கணவனையும், பேணிப் பெருமை அமைந்த சொல் உண்டாகும்படி, இல்லறத்தை காப்பாற்றிச் சோர்வின்றி வாழ்பவளாக ஒரு பெண் குறளில் போற்றப்படுகிறாள். இதனை மருதக்கலியில் வாழும் மகளிருக்கு எடுத்துக்காட்டாக கூறலாம்.

வளமை மிகுதியும் அதனால் அமையும் போக நுகர்ச்சியிலே விருப்பமும் தலைவனைக் காமத்தில் முழ்கி பரத்தனாகச் சுற்றுதலும் இயல்பான நிகழ்வாக அமைகின்றது.

கற்புச் செறிவுடைய மனைவி அவனை மறக்காமலும் வெறுக்காமலும் தன் இல்லறத்தின் பெருமையை நிலைநாட்டுவதாக மருதக்கலி கூறுகிறது.

**வீங்குநீர் அவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட**
**ஞாங்கர் மலர்சூழ்ந்து, ஊர்புகுந்த வரிவண்டு,**
**ஓங்குயர் எழில்யானைக் கனைகடாம் கமழ்நாற்றம்**
**அளிப்பெற்றொம், எம்மை நீ அருளினை விழியாது**
**வேட்டோர் திறந்து விரும்பியநின்! பாகனும்**
**நீட்டித்தாய் என்று, கடாஅம், கடுமம் திண்தேர்**
**பூட்டு விடாஅ நிறுத்து**

மருதக்கலிபாடல்-66

ஒரு தாமரை பொய்கையிலே ஒரு வரியமைந்த வண்டு தாமரை மலரில் அமர்ந்து தேனுண்டு மகிழ்ந்திருந்தது. வயல்களிலே குவளை மலர்கள் மலர்ந்திருந்தன. பூ விற்பவர்கள் குவளை மலரை வயலிருந்து கொய்து ஊருக்குள் எடுத்துச் செல்கின்றனர். தாமரைப் பொய்கை வண்டு அதை விட்டுவிட்டு மதநீரை நாடிப் போய்விட்டது என்றும் இதனை தலைவனது பண்பிற்கு ஒப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள் ஆசிரியர்.

தலைவன் பகல் முழுவதும் பரத்தையரை நாடிச் சென்று விட்டு வீடு திரும்பும் வேளையில் மனைவியானவள், தன் தலைவனிடம் ஏதோ! என்பால் சிறிது ஞாபகம் வைத்து என்னை காண வந்தமைக்கு நான் மகிழ்ச்சியடைகிறேன்.உன் பரத்தையருக்கு வேண்டியவனான உன் பாகன் வெளியில் தேரோடு நிற்கிறான். விரைந்து செல் பரத்தையரோடு உள்ள பிணைப்பு அற்றுவிடாமல் சென்று நிலை நிறுத்துவாயாக என்று கூறி மனதிற்குள் வருந்துகிறாள் என்பதை இப்பாடல் வழி உணர முடிகிறது.

**ஐங்குறுநூற்றில் மருதநில மகளிரின் மேன்மை:**

"வேந்தன் மேய தீம்புனல் உலகம்" எனும் மருதம் பல்பொருள் வளமையால் பெருக்க முற்றிருந்தது போன்றே மக்களின் வாழ்வியல் வகையாலும், பிறநிலத்து மாந்தரினும் தனித்தன்மை பெற்றிருந்தது. ஒழுக்கமானது தன் நெறிமையிலே தளர்ந்து, ஆடவர்க்கு ஒன்றும், பெண்டிர்க்கு மற்றொன்றுமாகவும், கருதப்பட்ட நிலையதாயிற்று. பரத்தமை ஒழுக்கம் தோன்றி பரவியதும் மருதநிலத்தில்தான். தலைவன், தலைவியரிடையே பிரிவுகாலத்தே எழும் மனவுணர்வுகளின் நுட்பமான தன்மைகளையும், அதிலும் உரிமையுடைய தன்னைத் துறந்து பிறப்பொருட் பெண்டிர்களோடு காமமே நினைவாகத் திரியும் கணவனை வெறுத்தாற்போல் ஊடினாலும், குடும்பநலன் கருதிப் பொறுத்து ஏற்று வாழும் தலைவியரின் மனச்செழுமையை மருதக்கலியில் உணரலாம்.

**அறன் எனப் பட்டதே இல்வாழ்கை அஃதும்**
**பிறன் பழிப்பது இல்லாயின் நன்று (கு.49)**

இல்வாழ்கை என்பது அறனாக கூறப்பட்டாலும், அவ்வாழ்கையை பிறர் பழிக்காமலும் நல்ல முறையில் வாழ வேண்டும் என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

ஐங்குறு நூற்றில் இதனை வேட்கைப்பத்து, வேழப்பத்து, களவன்பத்து, தோழிக்கு உரைத்தபத்து, புலவிப்பத்து, தோழி கூற்றுப்பத்து, கிழத்தி கூற்றுப்பத்து, புனலாட்டுப்பத்து, புலவிவிராயபத்து, எருமையத்து என பகுத்து தலைவன், தலைவயின் வாழ்வியலைக் கூறுகின்றன.

**வேட்கைப் பத்து :**

வேட்கைப் பத்து வேட்கை' என்பது விருப்பம் ஆகும். புறத்தொழுக்கத்தில் நெடுநாள் வாழ்ந்த தலைவனின் உடனுறை வின்பம் பெற்றிருந்த காலத்திலே, தலைவியின் மனவேட்கை எவ்வாறு பொறுப்புணர்வோடு செயல்படுகிறது என்பதை அவள் நலத்தையே பெரிதும் நினைத்து வருந்தும் தோழியின் மன வேட்கையை குறிப்பிடும் வண்ணம் அமைகிறது.

**“வாழி அதன் வாழி அவினி!**
**நெற்பல பொலிக, பொன் பெரிது சிறக்க;**
**எனவேட் டோளே யாயே; யாமே**
**நனைய காஞ்சித் சினைய சிறுமீன்**
**யாணர் ஊரன் வாழ்க!**
**பாணனும் வாழ்க! என வேட்டேமே!**

பூவரும்புகள் கொண்ட காஞ்சி மரத்தையும் சினைகளைக் கொண்ட சிறுமீன்களையும் மிகுதியாகவுடைய தலைவன் வாழ வேண்டும் எனவும் அவனது ஏவலனாகிய பாணனும் வாழ்க என தலைவி உரைப்பதாக கூறுவது சிறப்பாக அமைந்துள்ளது.

**"மனைநாடு வயலை வேழம் சுற்றும்**
**துறைகேழ் ஊரன் கொடுமை நாணி**
**'நல்லன்' என்றும் யாமே;**
**அல்லன் என்னும் என் தடமென் தோளே!**

தலைவன் ஒழுக்கம் தவறுதலுடையனாயினும், அது பின்னாளில் வெளியில் தெரிந்தால்,தவறாகும் என்று கூறிய தோழிக்கு தலைவி தன் மனக்கருத்துக்களை உரைப்பதாக இப்பாடல் அமைகின்றது சிறப்பு.

பழந்தமிழர் வாழ்வில் களவு வாழ்கை இல்லாமல் கற்பு வாழ்கை அமைவதில்லை. இதனை எட்டுத்தொகையில் உள்ள அகம் சார்ந்த நூல்கள் ஐந்தின் வழி அறியமுடிகின்றது.

**"நின்ற சொல்லர் நீடுதோன்று இனியர்**
**என்றும் என்தோள் பிரிபறி யலரே"** (நற்றினை பாடல் 1-2)

இவ்வாறு தலைவி தலைவனைப் பற்றி நெஞ்சம் நிறைய எண்ணிக் கூறுவதை சங்கப்பாடல்களில் அறிய முடிகிறது.

**அறைபோகும் நெஞ்சு!**

**கார்முற்றி, இணர் ஊழ்த்த காழ்தோட்ட மலர்வேய்ந்து**
**சீர்முற்றிப் புலவர்வாய்ச் சிறப்பு எய்தி, இருநிலம்**
**துறைபோதல் ஒல்லுமே -தூவாகாது ஆங்கே**
**அறைபோகு நெஞ்சு உடையார்க்கு? (67-பாடல்)**

பரத்தையரோடு தொடர்புற்ற தலைவனை கொஞ்சமாவது நீயும் ஊடியிருந்தால்தான் அவனுக்கு தனது பிழையின் குற்றம் புரியும் என்கிற தோழிக்கு, தலைவி தனது மனதானது தக்க சமயத்தில் காலை வாரிவிட்டு விடுகிறதே என்று தன் நிலையைக் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**ஐங்குறுநூறு தலைவியின் மாண்பு:**

**பூத்த கரும்பில் காய்த்த நெல்லிற்**
**கழனி யூரன்**

எனும் அடிகளில் தலைவனின் ஊரில் பூத்த கரும்பு போன்ற பயனற்ற பரத்தையும் மணிமுற்றிக் காய்த்த நெல் போன்ற பயனுள்ள தலைவியும் உள்ளார்கள் எனக்கூறிப் பரத்தையரைத் தலைவி இழிந்துரைத்தல் உள்ளுரையாம்.

**நெற்பல பொலிக பொன் பெரிது சிறக்க**
**விளைக வயலே வருக இரவலர்**
**......................................**
**..........................................**
உவலைக் கூவற் கீழ
மானுண் டெஞ்சிய கலுழிநீரே

இப்பாடலில் தலைவியின் மாண்பு புலப்படும் வண்ணம் அமைகிறது.

**புலவிப் பத்து உரைப்பன:**

புலவி என்பது புணர்ச்சியான் வந்த மகிழ்ச்சி குறைபடாமல் காலம் கருதிக் கொண்டு பயப்பதோர் உள்ளநெகிழ்ச்சி என்பர் பேராசிரியர்.

தலைவிக்கு அறிவுரை புகட்டும் தோழியானவள் தலைவனின் செயலை மறந்து அவன் மீண்டும் இல்லத்துக்கு வரும்போது அன்புடன் ஏற்றுக் கடமை பேணுமாறு தலைவிக்கு சொல்கிறாள். அவ்வேளையில் தலைவி தன் உள்ளத்து துயரத்தை இகழ்ந்து சொல்வதாக அமைந்த செய்யுள் இது

**“துன் பார்ப்புத் தின்னு மன்பின் முதலையொடு**
**பெண்போற் செய்யு மூர்கிழவோனே”**

இப்பாடலை தலைவி தலைவனுக்கு செய்த பனிவிடைக்குச் சான்றாகவும், அதனால் தலைவனின் செயலை குற்றமாகவும் கருதுவதாக அறியலாம்.

**கற்பு நெறியின் மேன்மை:**

கற்பு என்பதற்கு அகராதியில் கல்வி அறிவு, முல்லைக்கொடி, கதி, மகளிர்கற்பு என பல பொருள்கள் கூறப்பட்டுள்ளன. இங்கு மகளிர் கற்பு என்பது

**பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்**
**திண்மையுண் டாகப் பெறின்**

என்று வியந்து போற்றினார் வள்ளுவப் பெருந்தகை

பெண்ணின் பெருமை பேசியவர் திரு.வி.க புதுமைப் பெண்களைப் படைத்துக் காட்டியவர் மகாகவி பாரதியார் இப்படி எத்தனையோ அறிஞர்களும் கவிஞர்களும் பெண் பிறவியைப் பெரும்பிறவியாகப் போற்றியுள்ளார்கள்.

கற்பில் சிறந்தவளான அருந்ததியை திருமண நாளன்று வேதம் வல்ல அந்தனன் மணமக்களை அழைத்து அதோ வானில் தெரியும் அருந்ததியைப் பார்த்து வணங்குங்கள் என்று கூறுவது மரபு. ஆவ்வந்தனர், தலைவனையும், தீயைவலம் வருமாறு கூற, காதலனும், தலை கவிழ்ந்தவளாகக் காதலியும் வலம்வரும் கற்பு நெறியில் தலைப்படும் காட்சியை மருதக்கலி(43-5) பாடல் குறிப்பிடுகிறது.

கலித்தொகையில் தலைவன் களவொழுக்கத்தை உடையவனாய்த் தலைவியை மணந்து கொள்ளாமல் ஒழுகி வந்தான். அதனால் தோழி உலகியலை எடுத்துச் சொல்லி மணந்து கொள்ளும்படி கூறித் தலைவனை தெருட்டியது துறைவிளக்கமாக அமைகிறது.

'வரைவு கடாம் பட்டோர்க் கடாவல் வேண்டினும்' என்பதால் தலைவன் தெருளாதவனைத் தெருட்டி வரைவு கடாயது.

ஐங்குறு நூற்றில் தலைவனின் காதலை முதன் முதலில் ஏற்காது தடுத்துப் பலவுரைத்தும், அவன் அதனையே பிடிவாதமாகப் போற்றி நிற்கிறாள். பாங்கன் உளங்கொண்டானைப் பற்றிய விவரங்களை வினாவுகின்றான். அவனுக்கு தலைவன் அவளைப்பற்றி உரைப்பதாக அமைந்த செய்யுள் இதுவாகும்.

**"கடற்கோடு செறிந்த வளையயல் முன்கைக்**
**கழிப்பூத் தொடர்ந்த இரும்பல் கூந்தல்**
**..................................................................**
**.....................................................................**
**நிறையரு நெஞ்சம் கொண்டொளித் தோனே!"**

இவ்விதம் தலைவன் தலைவியின் காதல் வாழ்க்கையினையும் ஒழுக்க நெறிகளையும் ஒவ்வொரு தினையிலும் சிறப்பாக காணலாம்.

## முடிவுரை:

ஐங்குறுநூறு மற்றும் கலித்தொகையில் வாழும் மகளிரின் கற்பின் மேன்மை மகத்துவமானது, மேன்மையானது என்று சொல்வதே சிறப்பாகும். சங்க காலத்தில் எண்ணற்ற பெண் பாற்புலவர்கள் வாழ்ந்ததாக சான்றுகள் கூறுகின்றன.

**பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா!**
**பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா!**
**தண்மை இன்பம்நற் புண்ணியஞ் சேர்ந்தன**
**தாயின் பெரும் சதியென்ற நாமும் ..... (பெண்மை -5)**

இப்பாடல் வரிகள் மகாகவி பாரதியாருடையது, இது பெண்ணுக்கு பெருமை சேர்க்ககூடியவை இது புதுக்கவிதைகளாக கூறப்பட்டாலும் என்றுமே மகளிரின் நிலை ஒன்றுதான். ஆதனை மேன்மையடையச் செய்வதாகவும், உயர்வு நிலைக்கு கொண்டு செல்வதாக அமைவது நமது இலக்கியங்கள் ஆகும். இவற்றுள் கலித்தொகையும் ஐங்குறுநூறும் நமது பெண்ணினத்தின் இயல்புகளையும், புனிதத்தையும் நிலை நாட்டுவதாக அமைந்துள்ளது.

## அடிக்குறிப்பு


1. தமிழ் இலக்கிய வரலாறு முனைவர் ச.சுபாஷ்சந்திரபோஷ்
முதற்பதிப்பு-2012)
இரண்டாம் பதிப்பு-2013
முன்றாம் பதிப்பு-2014
நான்காம் பதிப்பு-2015
2. மேலது (ப.எண்)387
3. ஐங்குறுநூறு, மோகனதாஸ் ராமசாமி
ப.எண்(13) முதற்பதிப்பு-2016, கலைஞன் பதிப்பகம்
4. திருக்குறள் - பெரியண்ணன் உரை
(கு.எண்) 56, நூற்றைந்தாம் பதிப்பு-2021
வனிதா பதிப்பகம், சென்னை
5. கலித்தொகை-புலியூர்க் கேசிகன் உரை (ப.எ 63ன் -173)
முதற்பதிப்பு-2010
இரண்டாம் பதிப்பு-2017
கங்கை வெளியீடு
6. திருக்குறள் - பெரியண்ணன் உரை கு.எண்-49
7. ஐங்குறுநூறு-மோகனதாஸ் ராமசாமி-ப.எண்-15
8. மேலது-மோகனதாஸ் ராமசாமி-ப.எண்-15
9. நற்றினை பாடல்(1-2)
10. கலித்தொகை-புலியூர்க்கேசிகள் உரை-(ப.எண் 175)

11. தமிழ் இலக்கிய வரலாறு-கா.கோ.வேங்கடராமன் ப.எண்-55, கலையக வெளியீடு, முதற்பதிப்பு-2001, இரண்டாம் பதிப்பு-2002, முன்றாம் பதிப்பு-2004, நான்காம் பதிப்பு-2006, மறு அச்சு-2012

12. மேலது தமிழ் இலக்கிய வரலாறு-கா.கோ.வேங்கடராமன் ப.எண்-55, கலையக வெளியீடு, முதற்பதிப்பு-2001, இரண்டாம் பதிப்பு-2002, முன்றாம் பதிப்பு-2004, நான்காம் பதிப்பு-2006, மறு அச்சு-2012

13. ஐங்குறுநூறு-மோகன்தாஸ் ராமசாமி ப.எண்-19

14. திருக்குறள் - பெரியண்ண ன் உரை(கு.எண் 54) ப.எண்-21

15. பாரதியார் கவிதைகள் (வானதி பதிப்பகம்) முதற்பதிப்பு 1968(பெண்மைபாடல்-5)